# மகளிர் உழைப்புக்கு அங்கீகாரம்

## உரிமைத் தொகை தொடக்க விழாவில் முதல்வர் பெருமிதம்

**காஞ்சிபுரம், செப். 15:** மகளிரின் உழைப்புக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் உரிமைத் தொகை திட்டம் தொடங்கிவைக்கப்பட்டிருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்ட தொடக்க விழா காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவில், திட்டத்தைத் தொடங்கி வைக்கும் வகையில் 13 பெண்களுக்கு வங்கிப் பற்று அட்டைகளை வழங்கி முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்குவோம் என தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தோம். இது நிறைவேற்றவே முடியாத வாக்குறுதி எனப் பரப்புரை செய்தார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் இத்திட்டத்தை நிறைவேற்றி இருப்போம்; ஆனால், நிதி நிலைமை சரியாக இல்லை. அதனால்தான் நிதி நிலைமை ஓரளவு சரிசெய்துவிட்டு இப்போது தொடங்கியிருக்கிறோம்.

இத்திட்டம் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இரண்டு நோக்கங்களை அடிப்படையாக வைத்து இத்திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஒன்று, எந்தப் பலனையும் எதிர்பாராமல் வாழ்நாளெல்லாம் உழைக்கக்கூடிய பெண்களின் உழைப்புக்கு கொடுத்திருக்கிற அங்கீகாரம்; மற்றொன்று, ஆண்டுக்கு ரூ.12,000 அளிப்பதன்மூலம் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உறுதுணையாக இருக்கும். இந்த இரண்டும்தான் திராவிட மாடல் ஆட்சியின் நோக்கங்கள்.




காஞ்சிபுரத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தொடங்கி வைக்கும் வகையில் பற்று அட்டையை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் உள்ளிட்டோர்.

**அண்ணா பிறந்த நாளில்...** மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதி, பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம், உயர்கல்வி பயிலும் மாணவியருக்கு புதுமைப் பெண் திட்டம், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் 'நான் முதல்வன் திட்டம்' உள்பட ஒவ்வொரு திட்டத்தையும் தொடங்கியபோது நான் அடைந்த மகிழ்ச்சியைவிட இப்போது தொடங்கியுள்ள திட்டத்தால் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில், அவர் பிறந்த மண்ணில் இத்திட்டத்தைத் தொடங்குவதைவிட வேறு என்ன மகிழ்ச்சி இருக்க முடியும்?.

பெண்களுக்காக எண்ணற்ற திட்டங்களைத் தந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரில் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டம் என இந்தத் திட்டமும் செயல்படுத்தப்படுவதுதான் பொருத்தமானது. திமுக அரசு கொண்டுவந்துள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் மகுடம் சூட்டக்கூடிய வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 வீதம் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வழங்கப்படவுள்ளது. இது மகளிருக்கான உதவித் தொகை அல்ல, உரிமைத் தொகை. பசிப்பிணியைப் போக்கியும், அறிவுப் பசியைத் தணித்தும் வருகிறோம். இது உங்கள் கனவுகளை நனவாக்கும் ஆட்சி என்றார் முதல்வர் ஸ்டாலின்.

விழாவுக்கு குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை வகித்தார். எம்.பி. க.செல்வம், எம்எல்ஏ-க்கள் க.சுந்தர், எழிலரசன், கு.செல்வப்பெருந்தகை, மேயர் மகாலட்சுமி யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா வரவேற்றார். மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன் நன்றி கூறினார்.

## தாய், மனைவி, மகள்: முதல்வர் நெகிழ்ச்சி

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மகளிர் உரிமைத் தொகை திட்ட தொடக்க விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியபோது, தன் தாய், மனைவி, மகன் குறித்து நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

'ஆரம்ப காலத்தில் எனது அரசியல் வாழ்வில் சிறிய நிகழ்வுகளைக் கூட என் தாயிடம் கூறித்தான் என் தந்தையிடம் சொல்லச் சொல்வேன். இப்போதும் நான் சென்று பார்க்கிறபோது என் தாயின் முகத்தில் ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு இணையானது வேறு எதுவும் இருக்க முடியாது. அதேபோல என்னில் பாதியாகவே இருக்கிறார் என் மனைவி துர்கா. என் மகள் செந்தாமரை அன்பின் மறுவடிவம்.

கருணைமிகு தாய், உறுதுணையான மனைவி, தன்னம்பிக்கை நிரம்பியிருக்கும் மகள்– இவர்கள் மூவரும் எனக்கு கிடைத்திருப்பது பெரும் பாக்கியம் என்றார் அவர்.

## தமிழகம் முழுவதும்...

மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை காஞ்சிபுரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்த அதேவேளையில், தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் திட்டம் தொடங்கப்பட்டது.

அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் இத்திட்டத்தை தொடங்கிவைத்தனர்.

முன்னதாக, மகளிர் உரிமைத் தொகைத்திட்டத்துக்காக ஒரு கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை கடந்த சில நாள்களாக நடைபெற்றன. அவற்றில் தகுதியான விண்ணப்பதாரர்களாக ஒரு கோடியே 6 லட்சம் மகளிர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களின் வங்கிக் கணக்கில் தமிழக அரசு சார்பில் ரூ.1,000 செலுத்தப்பட்டது.

## மாதந்தோறும் 15–ஆம் தேதி...

**சென்னை, செப். 15:** மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு மாதந்தோறும் 15–ஆம் தேதி ரூ.1,000 கிடைக்கும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

'மகளிர் உரிமைத் தொகை பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.1,000 கிடைக்கும் வகையில், அதற்கான தொகையானது அரசின் சார்பில் வங்கிகளில் செலுத்தப்படும். இந்தத் தொகை ஒவ்வொரு மாதமும் 15–ஆம் தேதி வரவு வைக்கப்பட்டு, அன்றைய தினமே பயனாளிகளின் வங்கிக் கணக்கில் சென்றடையும்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வங்கி இணைப்புச் சேவைகளிலோ அல்லது கணினி இணைப்புகளிலோ பிரச்னை ஏற்படும்பட்சத்தில் அதற்கடுத்த நாள் உரிமைத் தொகை கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது' என்று அரசு அரசுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# 'விஸ்வகர்மா' திட்டம் நாளை தொடக்கம்



**புது தில்லி, செப். 15:** பாரம்பரியத் தொழிலை மேற்கொண்டு வரும் கைவினைக் கலைஞர்களுக்குப் பயிற்சி–நிதியுதவி வழங்குவதற்கான பிஎம்–விஸ்வகர்மா திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை (செப். 17) தொடங்கி வைக்கிறார்.

பாரம்பரிய கைவினைக் கலைஞர்களுக்கான விஸ்வகர்மா திட்டத்தை சுதந்திர தின உரையின்போது பிரதமர் மோடி அறிவித்தார். ரூ.13,000 கோடியில் அத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் வழங்கியிருந்தது.

இந்நிலையில், அத்திட்டத்தைப் பிரதமர் மோடி தனது பிறந்த நாளான செப்டம்பர் 17-ஆம் தேதி தொடங்கி வைக்கவுள்ளார். இத்திட்டத்தின் கீழ், பாரம்பரிய கைவினைக் கலைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. கைவினைப் பொருள்களைச் செய்வதற்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்கு ரூ.15,000 நிதி வழங்கப்படும். மேலும், கைவினைக் கலைஞர்கள் தங்கள் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்திக் கொள்வதற்காக பிணையில்லாத வங்கிக் கடனும் வழங்கப்படவுள்ளது.

அரசின் இணைய சேவை மையங்கள் வழியாகக் கைவினைக் கலைஞர்கள் தாமாகவே இத்திட்டத்தின் கீழ் பயனடைய பதிவு செய்து கொள்ளலாம் என மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் பாரம்பரிய கைவினைக் கலைஞர்களின் திறனை மேம்படுத்தும் என்றும், குடும்ப அடிப்படையிலான பாரம்பரியத் திறன்களின் வளர்ச்சிக்கு உதவும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக பாரம்பரிய கைவினைப் பொருள்கள் சிறந்த வடிவிலும் கூடுதல் தரத்துடனும் மக்களுக்குக் கிடைக்கும் என்றும் மத்திய அரசு சார்பில் கூறப்பட்டுள்ளது. கைவினைக் கலைஞர்களுக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தவும் இத்திட்டம் வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தச்சர், படகு கட்டுவோர், கொல்லர், பூட்டு தயாரிப்போர், பொற்கொல்லர், பானை வனைவோர், சிற்பம் செதுக்குவோர், முடி திருத்துவோர், பூந்தோட்டம் அமைப்போர், செருப்பு தைப்போர், பாய் பின்னுவோர், கூடை முடைவோர், பொம்மை தயாரிப்போர், தையல்காரர், மீன்பிடி வலை பின்னுவோர் உள்ளிட்ட 18 பாரம்பரிய தொழில்களைச் செய்வோர் இத்திட்டத்தின் கீழ் பயனடைய முடியும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# விஸ்வகர்மா திட்டம்: ஒரு பார்வை!



பி.எஸ்.எம். ராவ்

கைவினைக் கலைஞர்களின் குலதெய்வ வழிபாட்டு தினமான விஸ்வகர்மா ஜெயந்தி செப்டம்பர் 17-இல் கொண்டாடப்படுகிறது. இந்நாளில், கைவினைத் தொழிலாளர்கள், கலைஞர்களுக்கு உதவும் வகையில் பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் தொடங்குகிறது. கைவினைத் தொழிலாளர்கள் மிகுந்த இதர பிற்பட்ட வகுப்பினரின் (ஓபிசி) வாக்குகளை பெருமளவில் கவர இத்திட்டம் உதவும் என்று மோடி அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

நாட்டு மக்கள்தொகையில் 52% உள்ள ஓபிசி வகுப்பினரின் ஆதரவைப் பெறுவது, விரைவில் நடைபெற உள்ள மிசோரம், சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், தெலங்கானா மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல்களிலும், அடுத்த ஆண்டு நிகழ உள்ள மக்களவைத் தேர்தலிலும் பலனளிக்கும் என்பது பாஜகவின் நம்பிக்கை.

[illegible]

**விஸ்வகர்மா திட்டத்தில் ஐந்தாண்டுகளுக்கு மத்திய அரசு ஒதுக்கும் நிதி ரூ. 13,000 கோடி. நகர்ப்புற, கிராமப்புற கைவினைஞர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை, நாட்டிலுள்ள மொத்த ஓபிசி பிரிவினரின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவே.**

[illegible]

நாளை (செப்.17) விஸ்வகர்மா ஜெயந்தி.

கட்டுரையாளர்:
பொருளாதார நிபுணர்.

# சர்வதேச பொருளாதாரம் சரிந்தாலும் இந்தியா வளர்ச்சி காணும்

## உலக பொருளாதார கூட்டமைப்பு தகவல்

**புது தில்லி, செப். 15:** அடுத்த சில ஆண்டுகளுக்கு உலகின் பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரம் சரிவைச் சந்திக்கும் என்றும், இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி காணும் என்றும் நிபுணர்கள் நம்புவதாக உலகப் பொருளாதார கூட்டமைப்பின் (டபிள்யுஇஎஃப்) ஆய்வு தெரிவிக்கிறது.

தலைமை பொருளாதார நிபுணர்களின் ஆய்வறிக்கையை டபிள்யுஇஎஃப் வெள்ளிக்கிழமை வெளியிட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

அடுத்த சில ஆண்டுகளுக்கு சர்வதேச பொருளாதாரம் சரிவைச் சந்திக்கும் என 60 சதவீத தலைமை பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர். உலகின் பெரும்பாலான நாடுகளின் பொருளாதார வளர்ச்சி சரிவையே எதிர்கொள்ளும். அதே வேளையில், தெற்காசிய நாடுகள் முக்கியமாக இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நேர்மறையாக இருக்கும் என 90 சதவீத நிபுணர்கள் கணிக்கின்றனர். இந்தியப் பொருளாதாரம் நடுத்தர அளவிலோ அல்லது வலுவான வளர்ச்சியையோ காணும்.

உலகின் பல நாடுகள் அரசியல், நிதி சார்ந்த பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றன. அதனால், ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளைப் பெரும்பாலான நாடுகள் 2030-ஆம் ஆண்டுக்குள் அடையாது என்றே 10-இல் 6 பொருளாதார நிபுணர்கள் நம்புகின்றனர்.

சர்வதேச அளவில் அதிகரித்துக் காணப்பட்ட பணவீக்கம் விரைவில் குறையும் என 86 சதவீத நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர். அதே வேளையில், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கணித்துள்ளனர். முக்கியமாக, தொழில் நிறுவனங்களுக்கான கடன் வழங்கலில் பாதிப்பு, கடனைத் திரும்பச் செலுத்தாத தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, பங்குச் சந்தைகளில் பாதிப்பு உள்ளிட்டவை ஏற்பட வாய்ப்புள்ளது.

வளர்ந்து வரும் நாடுகள் அதிக பாதிப்புகளை எதிர்கொள்ளும். உணவுப் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பிரச்னைகளை அந்நாடுகள் எதிர்கொள்ளலாம். சர்வதேச சூழல் இவ்வாறே தொடர்ந்து நீடித்தால், 2030-ஆம் ஆண்டில் உலகின் பாதிக்கும் அதிகமான மக்கள் ஏழ்மை நிலையிலேயே இருப்பர்.

தனியார் முதலீடுகள் அதிகரிக்கும்பட்சத்தில் சர்வதேச அளவில் எண்ம கட்டமைப்புகள் மேம்பாடு, பசுமை எரிசக்தி உற்பத்தி உள்ளிட்ட துறைகள் வளர்ச்சி காணும் என ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# ஆதித்யா விண்கல சுற்றுப் பாதை தொலைவு அதிகரிப்பு

**சென்னை, செப். 15:** ஆதித்யா எல்-1 விண்கலம் பயணித்து வரும் புவி சுற்றுப் பாதை தொலைவு அதிகரிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சூரியனின் புறவெளியை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்-1 என்ற விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம், பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் மூலம் ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து செப். 2-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது.

குறைந்தபட்சம் 235 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 19,500 கி.மீ. தொலைவும் கொண்ட புவி நீள்வட்ட சுற்றுப் பாதையில் விண்கலம் நிலைநிறுத்தப்பட்டது. தொடர்ந்து, பெங்களூரில் உள்ள இஸ்ரோ கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விண்கலத்தின் சுற்றுப்பாதையை நீட்டிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், ஆதித்யா விண்கலத்தின் சுற்றுப்பாதை தூரம் நான்காவது முறையாக தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பு:

ஆதித்யா விண்கலம் புவிக்கு அருகே வரும்போது அதிலுள்ள உந்து விசை இயக்கப்பட்டு, சுற்றுப்பாதை தூரம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை இதுவரை 3 முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நான்காவது முறையாக வியாழக்கிழமை நள்ளிரவில் விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு உயர்த்தப்பட்டது.

அதன்படி, குறைந்தபட்சம் 256 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 1,21,973 கி.மீ. தொலைவும் கொண்ட சுற்றுப்பாதைக்கு விண்கலம் கொண்டு செல்லப்பட்டது. அடுத்தகட்டமாக, ஆதித்யா விண்கலம் செப்டம்பர் 19-ஆம் தேதி புவிவட்டப் பாதையில் இருந்து விலக்கப்பட்டு, சூரியனை நோக்கி பயணிக்கத் தொடங்கும்.

தொடர்ந்து நான்கு மாதகால பயணத்துக்கு பின்னர் புவியில் இருந்து 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள எல்-1 பகுதி அருகே விண்கலம் நிலைநிறுத்தப்பட்டு ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்படும்.

# குலசேகரன்பட்டினத்தில் அடுத்த ஆண்டுக்குள் ராக்கெட் ஏவுதளம்

## இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன் தகவல்



**தூத்துக்குடி, செப். 15:** தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணி அடுத்த ஆண்டுக்குள் நிறைவடையும் என்று இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன் தெரிவித்தார்.

தூத்துக்குடி மகாலெட்சுமி மகளிர் கல்லூரி பொன்விழா நிகழ்ச்சி வஉசி கல்லூரி கலையரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்திய விண்வெளி ஆய்வு மையம் சந்திரயான் 3-ஐ வெற்றிகரமாக நிலவுக்கு செலுத்தியதை தொடர்ந்து, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பி ஆய்வு செய்யும் ககன்யான் திட்டத்தை செயல்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய விண்வெளி ஆய்வு மையம் தகவல் தொழில்நுட்பம் - புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறது. தற்போது, ராக்கெட்டுகளை விண்ணுக்கு செலுத்தும் திட்டத்தில் தனியார் நிறுவனங்கள் ஈடுபட உள்ளன. அவை செயற்கைக்கோள்களை செலுத்தும்போது, அவற்றை செலுத்தக்கூடிய நிறுவனத்தின் நோக்கம், என்ன பணிக்காக செயற்கைக்கோளை செலுத்துகின்றன போன்ற விவரங்களை இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு - அங்கீகார மையம் (இன் ஸ்பேஸ்) தெரிந்து கொண்டு அதன் மூலமாகவே அவர்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்படும். இதுவரை 140-க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் செயற்கைக்கோள் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

குலசேகரன்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்குத் தேவையான 2,400 ஏக்கர் நிலத்தில் 2,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 400 ஏக்கர் நிலம் நவம்பருக்குள் கையகப்படுத்தப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது. அதைத் தொடர்ந்து ஏவுதளம் அமைவிடத்துக்கு சுற்றுச்சுவர், கட்டடம் கட்டும் பணி உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும். அடுத்த ஆண்டுக்குள் இந்தப் பணிகள் நிறைவுபெற்று, ராக்கெட் ஏவும் பணி தொடங்கும்.

கட்டுமான பணிகளுக்கான திட்ட மதிப்பீடு சுமார் ரூ. 700 கோடி இருக்கும். இந்த ராக்கெட் ஏவுதளம் மூலமாக பொருளாதாரத்தில் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும்; அதிக அளவில் வேலைவாய்ப்பு உருவாகும். ராக்கெட் ஏவுதளத்துக்குத் தேவையான உதிரி பாகங்கள் தயாரிக்க கூடிய பல தொழில் நிறுவனங்கள் இந்தப் பகுதியில் புதிதாக உருவாவதற்கும் வாய்ப்பு உள்ளது.

உள்நாட்டிலே உற்பத்தி என்ற புத்தொழில் நிறுவனங்களுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. மேலும், மின் குறைக்கடத்தி (செமி கண்டக்டர்) உற்பத்தி தொடங்குவதற்கான பணிகளையும் அரசு தொடங்கியுள்ளது என்றார் சிவன்.

ACADEMY